# பராமரிக்கும் உறவினர்

நீங்கள் ஒரு ஆண் அல்லது பெண் உறவினரைப் பராமரிக்கின்றீர்களா?
**நாங்கள் ஒரு விவேகம் நிறைந்த தீர்வை வழங்குகின்றோம்.**

SPITEX BERN அமைப்பு உறவினர்களைப் பராமரிப்பவர்களுக்கு அதற்குத் தகுந்த
மேற்படிப்பை, நேரடியாகத் தொழில் ஒப்பந்தம், காப்புறுதிகள் மற்றும் சமூக நிதிஉதவிகளுடன் ஏற்பாடு செய்கின்றது. இதன்மூலம் பராமரிக்கப்படும் உறவினர்கள் சிறப்பான வகையில் அவர்களது சவால்களைச் சமாளித்துக் கொள்வார்கள். அதாவது ஒரு பக்கத்தில் உணர்வுபூர்வமான மனஅழுத்தங்கள் மற்றும் தாம் அன்புசெய்த மக்கள் குறித்த கவலைகளை மறுபக்கத்தில் அன்றாடம் மேற்கொள்ளும் நடைமுறைப் பணிகளை.

அதிக வேளைகளில் வீட்டிற்கு வெளியில் ஒரு (முழுநேர-) வேலையைச் செய்வதுடன் பராமரித்தல்- மற்றும் கவனித்துக்கொள்ளும் பணிகளைச் சேர்த்துக் கொள்வது மிகவும் கடினமானது. SPITEX BERN அமைப்பு நீங்கள் செய்யும் பராமரிப்புப் பணிக்கு, மருத்துவக் காப்புறுதியிடமிருந்து கட்டணம் பெற்றுத்தரும் வகையில் எற்பாடு செய்துகொள்ளும்.

## எமது வசதிகள்

- √ நீங்கள் SPITEX BERN அமைப்பிடமிருந்து உங்கள் பராமரிப்பு செயற்பாட்டிற்கான ஒரு தொழில் ஒப்பந்தத்தைப் பெற்றுக்கொள்வீர்கள், இதன்மூலம் அனைத்து நன்மைகளையும் பெற்றுக்கொள்வீர்கள் (தேவைப்படும் காப்புறுதிகள் மற்றும் சமூகஉதவிகள்).

- √ SPITEX BERN அமைப்பு முதல் நாள் தொடக்கமே மிகக் கவனத்துடன் ஆதரவு வழங்கி, கற்பித்து உங்களைப் பராமரித்துக் கொள்வார்கள். இதற்குப் பொறுப்புவகிக்கும் (உங்களுக்குப் பொறுப்பானவர்) துறைசார் பராமரிப்பு நபர் ஒழுங்காக உங்களது பராமரிப்புத் தராதரத்தைப் பரிசோதித்துக் கொள்வதுடன் அவரே உங்கள் முதல் தொடர்பாளராக இருப்பார்.

- √ நீங்கள் SPITEX BERN அமைப்பிடமிருந்து நிர்வாக விடயங்கள் குறித்து ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வீர்கள்:
மேலதிக நிதிஉதவிகள், உதவியற்றோருக்கான கொடுப்பனவு, மருத்துவக் காப்புறுதிக் கட்டணப் பற்றுச்சீட்டுகள் போன்றவை.

- √ SPITEX BERN அமைப்பு பரந்த அளவிலான விசேட உதவிகளை வழங்குவதுடன் தகுந்த தொழிற்கல்வி பெற்ற துறைசார் நபர்களைக் கொண்டுள்ளது. இவ்வாறு ஒன்றுசேர்ந்த பரந்த அறிவுள்ளவர்களுடன் நீங்கள் நேரடியாகத் தொடர்புகொள்ளலாம் என்பதுடன் நீங்கள் உங்கள் தேவைகளுடன் தனித்து விடப்படமாட்டீர்கள்.

- √ நீங்கள் ஒருசில நாட்கள் பயணிக்க வேண்டிய கட்டாயமிருந்தால் அல்லது தேவையிருந்தால் SPITEX BERN அமைப்பு உங்களது உறவினரின் பராமரிப்பு விடயங்களை- வழமைபோன்று நம்பிக்கையுடனும் மரியாதையுடனும் பொறுப்பேற்றுக் கொள்ளும்.

«இதில் பங்குபெறும் அனைவருக்கும்
இதுவொரு விவேகமான தீர்வாகும் என்பதுடன்
எனது நிர்வாகச் சுமை குறைவடைந்துவிட்டது»
P.H., பராமரிக்கும் உறவினர்

## உங்களுக்கான நன்மைகள்

- √ உங்கள் (நிதி) அழுத்தம் குறைவடையும் - நீங்கள் ஆற்றிய பராமரிப்பு வேலைக்குக் கட்டணம் வழங்கப்படும்.
- √ நீங்கள் உங்கள் ஆண் அல்லது பெண் உறவினருக்கு நம்பிக்கையான பராமரிப்பு நபராக இருப்பீர்கள்.
- √ இந்த வசதி ஓய்வூதியம் பெற்றுக்கொண்டு பராமரிக்கும் உறவினர்களுக்கும் பொருந்தும்
- √ இதில் மொழிப் பிரச்சினை எதுவும் இருக்காது, ஏனென்றால் நீங்கள் அதே மொழியையே பேசுகின்றீர்கள்.
- √ நீங்கள் தனிமையில் விடப்படமாட்டீர்கள், மாறாக எமது துறைசார் நபர்களின் ஆதரவுடன் பணியாற்றுவீர்கள்.
- √ நீங்கள் SPITEX BERN அமைப்பின் பல விசேட உதவிகளை நேரடியாகப் பெறும் வசதிகளை அடைவீர்கள்.

எவ்வித கட்டுப்பாடுகளுமின்றி மேலதிக தகவல்களைப் பெற நீங்கள் தொடர்புகொள்ளுங்கள்.

**தொலைபேசி: 031 388 50 50 அல்லது** info@spitex-bern.ch

SPITEX BERN - எங்கும் அனைவருக்குமாக